# 15-07-2024 செய்தி

## காற்று மாசு பிரச்சினை

- காற்று மாசு காரணமாக 2021ஆம் ஆண்டில் மட்டும் 81 லட்சம் பேர் உயிரிழந்ததாகவும், ஐந்து வயதுக்கு உள்பட்ட குழந்தைகள் அதிக ஆபத்தை எதிர்கொள்வதாகவும் யுனிசெஃப் வெளியிட்டிருக்கும் தகவல் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

### Report

- குறிப்பாக, இந்தியாவில் மட்டும் 21 லட்சம் பேர் மரணமடைந்திருக்கிறார்கள். மரணத்தை ஏற்படுத்தும் காரணிகளில் உலக அளவில் இரண்டாவது இடத்தில் காற்று மாசு பாதிப்பு இருப்பதாக யுனிசெஃப் வெளியிட்டிருக்கும் உலக அளவிலான காற்றுத் தர நிலை தொடர்பான அறிக்கை **(State of Global Air)** தெரிவித்திருக்கிறது.
- இந்தப் பிரச்சினையை உலக நாடுகள் தீவிரமாக அணுக வேண்டிய அவசியத்தை இந்தத் தரவுகள் உணர்த்துகின்றன.
- ஜுன் 19இல் அமெரிக்காவைச் சேர்ந்த 'ஹெல்த் எஃபெக்ட்ஸ் இன்ஸ்டிடியூட்' (ஹெச்.இ.ஐ) நிறுவனத்துடன் இணைந்து ஐ.நா.வின் துணை அமைப்பான யுனிசெஃப் வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கையின்படி, 2021 இல் உலக அளவில் ஐந்து வயதுக்கு உள்பட்ட 7 லட்சம் குழந்தைகள் காற்று மாசு பாதிப்புகளின் காரணமாக உயிரிழந்திருக்கிறார்கள்.
- சீனாவில் 23 லட்சம் பேரும், இந்தியாவில் 21 லட்சம் பேரும் மரணமடைந்திருக்கிறார்கள். இரண்டு நாடுகளிலும் ஒரு நிமிடத்துக்கு 4 மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன.
- இதன் மூலம், உலக அளவில் நிகழும் மரணங்களுக்கு – உயர் ரத்த அழுத்தத்துக்கு அடுத்தபடியாக – இரண்டாவது இடத்தில் காற்று மாசு இடம்பெறுகிறது.
- மொத்த உயிரிழப்புகளில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மார், வியட்நாம், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், எகிப்து, நைஜீரியா ஆகிய நாடுகள் மட்டும் 70% பங்கு வகிக்கின்றன.
- ஒவ்வொரு நாளும் சராசரியாக 2,000 குழந்தைகள் உயிரிழக்க, காற்று மாசு காரணமாகியிருக்கிறது.
- காற்று மாசுபாட்டால் குறைப்பிரசவம், குறைந்த எடையுடன் குழந்தைகள் பிறப்பது, ஆஸ்துமா, நுரையீரல் நோய்கள் ஏற்படுவதாகவும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது.
- காற்று மாசு காரணமாக ஏற்படும் தொற்றுநோய்கள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. கோடிக்கணக்கானோர் நாள்பட்ட நோய்களுடன் வாழ வேண்டியிருக்கிறது.

**பி.எம். 2.5**

- பி.எம். 2.5 என்ற நுண்துகள்தான் காற்று மாசடைவதற்கு மிக முக்கியக் காரணம். இந்தத் துகள்கள் 2.5 மைக்ரோ மீட்டருக்கும் குறைவான விட்டம் கொண்டவை.
- சுவாசம் மூலம் உள்ளிழுக்கப்படும் வகையில் அளவில் நுண்ணிய அளவியலானவை. வாகனப்புகை, அனல் மின் நிலையங்கள், தொழிற்சாலைகள், காட்டுத் தீ போன்றவற்றிலிருந்து இந்தத் துகள்கள் உருவாகின்றன.
- ஏழை மக்களின் வீடுகளில் மரக்கட்டை, வேளாண் கழிவுகள், நிலக்கரி போன்ற திட எரிபொருள்களைச் சமையலுக்குப் பயன்படுத்துவதால் ஏற்படும் மாசும் உடல்நலப் பாதிப்புகளுக்கு வழிவகுக்கிறது.
- ஓசோன் (ஓ3), நைட்ரஜன் டையாக்ஸைடு போன்றவையும் காற்று மாசை ஏற்படுத்துகின்றன.
- சுகாதார அமைப்புகள், பொருளாதாரம், சமூகம் எனப் பல்வேறு தளங்களில் காற்று மாசு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.
- இந்நிலையில், பசுமை எரிசக்தியைப் பரவலாக்குவது, சுகாதாரத் திட்டங்களை மேம்படுத்துவது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கொள்கை முடிவுகள் போன்ற முன்னெடுப்புகள் அவசியம்.

# இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மிளிரும் தமிழ்நாடு

**விடியல் பேருந்து திட்டம்**

- பெண்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர் ஆகியோர் கட்டணமில்லாமல் பயணிப்பது இத்திட்டம்.

**கலைஞர் மகளிர் உரிமைத்தொகை**

- மாதந்தோறும் ரூ. 1,000 உரிமைத்தொகை வழங்கப்படுகிறது.

**புதுமைப்பெண் திட்டம்**

- 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிய, தடையின்றி உயர் கல்வி பயிலும் நோக்கோடு, கல்லூரிகளில் பட்டப்படிப்புகள், பட்டயப் படிப்புகள் மற்றும் தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களில் பயில உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ. 1,000 ஒவ்வொரு மாணவிக்கும். அவர்களது வங்கி கணக்கில் நேரிடையாக வழங்கப்படுகிறது.

**இன்னுயிர் காப்போம்– நம்மை காக்கும் 48 திட்டம்**

- 'இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48' திட்டத்தில் சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே ஏற்கும்.

**நான் முதல்வன் திட்டம்**

- இத்திட்டத்தில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பயிற்சிகளும், பட்டதாரிகள் வேலைக்கு செல்வதற்கான மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

**பணிபுரியும் மகளிருக்கான தோழி விடுதிகள்**

- சமூக நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் 19 மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கு தோழி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.
- முதல்கட்டமாக திருச்சி, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய 3 இடங்கள்.

**திருநங்கைகள் நலன்**

- 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.1,000 யிலிருந்து 2023 மார்ச் முதல் 1,500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர் நலன்**

- மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை ரூ.5,000 என்பது ரூ. 8,000.

**விவசாயிகள் நலன்**

- தொலைநோக்குத் திட்டமாக இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் தான் வேளாண்மைக்கு என தனிநிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வேளாண் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

**தொழில்துறை வளர்ச்சி**

- வரும் 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும்.

**ஸ்டார்ட் அப் நிறுவனங்கள்**

- தமிழ்நாடு புதுதொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை கடந்த 20.09.2023 ல் முதலமைச்சரால் வெளியிடப்பட்டது. 2021ம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,032 இன்றைய நிலவரப்படி, இது 4 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 8,416 ஆக உயர்ந்துள்ளது.
- மகளிர் ஸ்டார்ட் அப்களின் எண்ணிக்கை 2021-ம் ஆண்டில் 966 ஆக இருந்தது. தற்போது 3 மடங்குக்கு மேல் அதிகரித்து 3,163 ஆக உயர்ந்துள்ளது.